# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு

## ஊடக அறிக்கை

***************************

**இந்திய துணை ஜனாதிபதியின் இலங்கை விஜயம் ( 2026 ஏப்ரல் 19-20)**

இந்திய துணை ஜனாதிபதி மாண்புமிகு திரு சி.பி.ராதாகிருஷ்ணன் அவர்கள் 2026 ஏப்ரல் 19 - 20 ஆகிய திகதிகளில் இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசுக்கான விஜயத்தினை மேற்கொள்வார். இந்தியத் துணை ஜனாதிபதி அவர்களால் இலங்கைக்கு மேற்கொள்ளப்படும் முதலாவது இருதரப்பு விஜயம் இதுவாகும்.

2. இவ்விஜயத்தின் போது மாண்புமிகு துணை ஜனாதிபதி அவர்கள் இலங்கை ஜனாதிபதி அதி மேதகு அநுர குமார திசாநாயக்க அவர்களை சந்திக்கவுள்ளார். அத்துடன் மாண்புமிகு இலங்கை பிரதமர் டாக்டர் ஹரிணி அமரசூரிய, ஏனைய முக்கிய பிரமுகர்கள் மற்றும் இந்திய புலம்பெயர் தலைவர்களுடனும் அவர் சந்திப்புகளை மேற்கொள்ளவுள்ளார்.

3. இந்தியாவின் மகாசாகர் தொலைநோக்கு மற்றும் அயலுறவுக்கு முதலிடம் கொள்கை ஆகியவற்றில் இலங்கை மிக முக்கியமான பங்காளராக உள்ளது. இந்நிலையில் அண்மைய காலத்தில் இரு நாடுகளுக்கும் இடையில் மேற்கொள்ளப்பட்ட உயர் மட்ட ஈடுபாடுகளை அடுத்து மாண்புமிகு துணை ஜனாதிபதி அவர்கள், இலங்கைக்கு விஜயத்தினை மேற்கொள்வதுடன் இந்த விஜயமானது இந்தியாவையும் இலங்கையும் பிணைக்கும் பல்லாயிரமாண்டுகால மக்கள் - மக்கள் உறவுகளுக்கு மேலும் வலுச்சேர்க்கின்றது.

************

**கொழும்பு**
**17 ஏப்ரல் 2026**

மூலம்:
https://www.mea.gov.in/press-releases.htm?dtl/41050/Visit_of_Vice_President_of_India_to_Sri_Lanka_April_1920_2026